

# புக் மார்க் தயார் செய்யுங்கள்

இது உங்கள் முதல் ப்ராஜக்ட். இந்த வீடியோவில் ஒரு புக்மார்க் எப்படி தைப்பது என்று பார்க்கலாம். தையல் கலை பற்றிய மற்ற பாடங்களை படித்த உங்களுக்கு இது மிகவும் சுலபமாக இருக்கும்.



இதை தொடங்குவதற்கு
- 8 இன்ச்க்கு 2 இன்ச் அளவுள்ள இரண்டு துண்டு துணிகள்
- 6 இன்ச்க்கு 2 இன்ச் அளவுள்ள ஒரு துண்டு துணி
- மற்றும் 4 இன்ச்க்கு 2 இன்ச் அளவுள்ள ஒரு ஃபெல்ட் துணி தேவை.

இத்துடன் ஒரு சிறிய நூல் குஞ்சலம், இதை நாமே செய்தாலும் சரி அல்லது கடையில் விற்பதை உபயோகித்தாலும் சரி.



ஸிக்ஸாக் பற்கள் கொண்ட கத்தரி கொண்டு எல்லா துணிகளையும் ஒரே சீராக கத்தரித்துக் கொள்ளவும். இது துணிகளில் பிசிறு வராதபடி பார்த்துக்கொள்ளும்.

பிறகு இரண்டு பெரிய துணிகளின் நேர் பக்கத்தை வைக்காமல் மறுபக்கத்தை வைத்து அதன் பின்னர் மற்ற இரண்டு சிறிய துண்டுகளையும் நேர் பக்கம் வைக்கவும்.

இவை எல்லாமே கோணலாக இல்லாமல் ஒரே கோட்டில் இருக்குமாறு செட் செய்துகொள்ளவும். ஒரு குண்டூசியை வைத்து இவற்றை நகராமல் பொருத்திக் கொள்ளவும். மேலே இருக்கும் நேர்முகத் துணியின் நடுவில் சிறிய குஞ்சலத்தை பொருத்தவும். அது நகராமல் இருக்க பின் செய்துகொள்ளவும்.




இவற்றை பொருத்திய பின்னர் உங்கள் புக்மார்க்கை தைக்க நீங்கள் தயாராக வேண்டும்.

செட் செய்த துணிகளை மிஷின் புட் அலைன்மென்டுக்கு சரி செய்து புட் ஐ கீழே இறக்கவும்.

பிறகு தையலின் மாதிரி பேட்டர்ன்களை தேர்ந்தெடுக்கவும். இப்போது நாங்கள் னு பேட்டர்ன்னை தேர்வு செய்துள்ளோம். இதற்கு பேட்டர்ன் செலக்டர் நாப்பை பயன்படுத்த வேண்டும்.

தையலின் நீளத்தை அதன் செலக்டரின் மூலம் செட் செய்யவும். எஸ்எஸ் மோட் ஐ உபயோகித்து அலங்காரத் தையலின் ஸ்டைலை செட் செய்து விட்டால் நீங்கள் தைக்க தயாராகிவிட்டீர்கள்.



நிதானமாக தைக்கத் தொடங்கவும். மெல்ல மெல்ல வேகத்தை அதிகரிக்கலாம். துணியை பிரஷர் புட்க்கு சரியாக வைத்து தைத்தால் மிஷின் சரியாக பேட்டர்ன்னை தைக்கும். அப்போது சொருகி இருந்த ஊசிகளை எடுக்க தவறாதீர்கள்.

துணியின் அடிபாகம் வந்ததும் மிஷினின் ஊசியை பாதியில் நிறுத்தி விட்டு புட் ஐ மேலே தூக்கவும். மிக்க கவனமாக அப்படியே துணியை திருப்பவும். இதை செய்து முடித்ததும் மற்ற மூன்று பக்கங்களையும் ஏறுமாறாக இல்லாமல் நேராக வைத்து தைக்கவும்.

மேல்பகுதியை தைக்கும் போது குஞ்சலம் வெளியே வராமல் இருக்க போட்டிருந்த பின்னை எடுக்கவும். இறுதியில் குஞ்சலம் நகராமல் எல்லா பக்கங்களையும் தைத்து விடவும்.



மிஷினிலிருந்து புக்மார்க்கை வெளியே எடுக்கவும். பிசுறு நூல்களை கத்தரிக்கவும்.

உங்கள் புக்மார்க் இப்போது ரெடி ஆகிவிட்டது. தைத்த பகுதியை பாருங்கள். தையலே ஒரு டிசைன் போல ஆகிவிட்டது அல்லவா

உங்கள் கற்பனையை பயன்படுத்தி இது போன்ற அழகான விதவிதமான புக்மார்க்குகளை நீங்களே உருவாக்குங்கள். பிட் துணிகளையும் இதர மெட்டீரியல்களையும் இது போன்ற கலை பொருட்களுக்கு உபயோகிக்கலாம்.

உங்கள் கற்பனை சிறகுகளை பறக்க விடுங்கள். ஒவ்வொரு புக்மார்க்கையும் விதவிதமாக தைத்துப் பாருங்கள். இவை எல்லாமே பரிசு குடுக்கவும் உகந்ததாக இருக்கும்.